

"அப்ப எல்லா இடமும் இப்பிடியே விகாரையைக் கட்டி பிடிக்கப்போயினம் போல"


Registered as a Newspaper

பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 148

திங்கட்கிழமை
22 ஏப்ரல் 2024

சித்திரை 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## தையிட்டி திஸ்ஸ விகாரை

# காணி அளவீட்டுக்கு இராணுவம் மறுப்பு



**அரசாங்க அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்:**

**பொதுமக்களையும் உள்நுழைய அனுமதிக்கவில்லை**

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

தையிட்டியில் தமிழ் மக்களின் உறுதிக்காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணியை அளவீடு செய்வதற்குச் சென்ற பொதுமக்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் இராணுவத்தினரால் மிரட்டப்பட்டுள்ளனர். நில அளவையை முன்னெடுப்பதற்கு பொதுமக்களை அனுமதிக்கமுடியாது என்று இராணுவத்தினர் கடும் தொனியில் எச்சரித்தமையால் அளவீட்டு நடவடிக்கையை கைவிட்டு அதிகாரிகள் திரும்பினர்.

11

---

**இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில்**

## தெல். பிரதேச செயலர் மீது விகாராதிபதி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 22

தையிட்டியில் தனியார் காணியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்குரிய காணியை அளவீடு செய்து தருவதற்கு தெல்

11

## சகோதரர்கள் இருவர் ஒரேநாளில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22

வடமராட்சி கிழக்கு மணற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட சகோதரர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை அன்று இரு வேறு இடங்களில் உயிரிழந்துள்ளனர்.

மணற்காட்டைச் சேர்ந்த மேற்படி

11

## தேங்காய் பிடுங்க ஏறியவர் தவறி விழுந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

தேங்காய் பிடுங்குவதற்காக ஏறியவர் தவறி விழுந்து காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். கொக்கு

11

**தியத்தலாவயில் பயங்கரம்:**

## திடலைவிட்டு விலகியது பந்தயக்கார்: 7 பேர் உயிரிழப்பு: 3 பேர் அபாயக்கட்டம்

கொழும்பு, ஏப். 22

தியத்தலாவ பந்தயக் கார் விபத்தில் 7பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும், மூவர் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களில் 4 வயதுச் சிறுமியும் அடங்குவதா தெரிவிக்கப்படுகின்றது.

பதுளை தியத்தலாவயில் நேற்று இடம் பெற்ற கார்ப் பந்தய நிகழ்வின்

11

## பொறுப்புக்கூறலை நிறைவேற்றாத இலங்கை

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஐ.நா. நேற்றும் கவலை வெளியீடு**

கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் அவசியம் என ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்தில்

11



**வடக்கு – கிழக்கு உட்பட பல இடங்களிலும் நேற்று**

## ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து ஐந்து வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு நேற்றுக் காலை 8.45 மணிக்கு இலங்கையிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

11

## ஈரான் ஜனாதிபதியின் வருகையில் மாற்றமில்லை

கொழும்பு, ஏப். 22

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் வருகை திட்டமிட்டபடி இடம் பெறும்என அரசதரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

'ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி நாளைமறு

11

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: மக்கள் மயப்படுத்த புதிய வழிமுறை

***சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆராய்வு***



யாழ்ப்பாணம், ஏப். 22

எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தல் 15ஆவது ஆண்டாக கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக நினைவேந்தலை மக்கள் மயப்படுத்த வேண்டுமெனச் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

11

## முதியவரின் சடலம் துணுக்காயில் மீட்பு

**உயிரிழப்பில் சந்தேகம்**

முல்லைத்தீவு, ஏப். 22

துணுக்காய் அணைக்கட்டு வீதியிலுள்ள வீட்டின் முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சுப்பிர மணியம்சின்னராசா (வயது-74) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்ட

11

## குற்றவாளிகளை காப்பரண் அமைத்து காப்பாற்றவே எல்லோரும் முயற்சி

**கர்தினால் கடும் குற்றச்சாட்டு**



கொழும்பு, ஏப். 22

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைதுசெய்வதற்கும், காட்டிக்கொடுப்பதற்கும், தயங்கிய முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய விசாரணைகளை மேற்கொள்வதற்கு தடையாக இருந்ததாக பேரா

02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விஞ்ஞாபனங்களில் நிறைவேற்று அதிகாரம் நீக்கம்

## வலியுறுத்துகிறார் கரு



**கொழும்பு, ஏப்.22**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில் கூறவேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள், மக்களின் ஆணையைப் பெறுவதற்கு முன்னதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், அதற்கான காலவரையறை உள்ளிட்ட விடயங்களை வெளியிடவேண்டும்.

மக்கள் ஆணைபெற்று வருபவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நாம் சிவில் அமைப்பாக இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புகளை வழங்குவதற்குத் தயாராகவே உள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ரைசியின் அழைப்புக்கு இதுவரை மறுப்பில்லை

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை இலங்கைக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்புக்கு இன்னமும் மறுப்புத் தெரிவிக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். ஈரானின் நிதிப்பங்களிப்பு

டன் முன்னெடுக்கப்பட்ட உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வதற்கு ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு இலங்கை அரசாங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், மத்தியகிழக்கில் இஸ்ரேல், ஈரான் இடையில் நேரடி மோதல்கள் ஏற்பட்டுள்ள பின்னணியில், ஈரானின் அதிபர் ரைசி இலங்கைக்கு வருவது சந்தேகத்துக்குரியதாகவே தொடர்ந்தும் பார்க்கப்படும் நிலையில், தமது அழைப்பை ஈரான் தரப்பு நிராகரிக்கவில்லை என்று அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம)



# இலவச அரிசித் திட்டம் முறைப்பாடுகள் கோரல்

கோப்பாய், ஏப். 22

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இலவச அரிசியைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளின் பட்டியல் மேற்படி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பொருத்தமற்றவர்களாக இருப்பின் அல்லது பொருத்தமானவர்கள் உள்வாங்கப்படவேண்டியிருப்பின் அதுதொடர்பான முறைப்பாடுகளைக் கோப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு நேரடியாகவோ அல்லது dskopay@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ அறியத்தருமாறு கோப்பாய் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (ப-66)

# ஐரோப்பிய நாடுகளுக்கு விமானப்பாதை மாற்றம்

கொழும்பு, ஏப். 22

ஐரோப்பிய நாடுகளுக்கான விமானப் பாதைகள் மாற்றப்படவுள்ளது என்று ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பாதுகாப்பு நடவடிக்கையாக விமானப் பாதைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பாவுக்கான விமானசேவை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது. லண்டன் செல்லும் விமானங்கள் ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகப் புறப்படும். அதனால்லண்டன்செல்லும்பயணிகள்முன்கூட்டியே விமான நிலையத்தை வந்தடைய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குற்றவாளிகளை....

யர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆன்மாக்கள் இளைப்பாறுக்கான பிரார்த்தனை மற்றும் ஐந்தாவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நேற்று இடம்பெற்றபோது அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மோசமான தாக்குதல் காரணமாக இலங்கையின் அரசியல் பயணத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், பொருளாதாரத்தில் முன்னேற்றமடைவதற்கும் இன்றுவரை முடியாதுள்ளது. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலால் வீழ்ந்த எமது நாட்டின் பொருளாதாரம் இன்றுவரை தலைதூக்க முடியாதுள்ளமையை, அந்தத் தாக்குதலின் தாக்கம் எடுத்துக்காட்டுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு, விஜித் மலல்கொட தலைமையிலான ஒரு குழுவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு என்பன அப்போது நியமிக்கப்பட்டது. எனினும் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் உண்மைகள் வெளிக்கொணரப்படவில்லை.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியான கோத்தாபயவினால் இது குறித்து ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தன்னை ஜனாதிபதியாக்கிக்கொள்ள அவர் இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்தினார்.

தேர்தலுக்குப் பின், நீர்கொழும்பு மற்றும் ஜா-எல நடத்தப்பட்ட இரு அரசியல் கூட்டங்களிலும் மற்றும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையினரையும் சந்தித்து கலந்துரையாடிய, கோத்தாபய, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் குறித்து, கடுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையான சூத்திரதாரிகள் வெளிக்கொணரப்பட்டு, தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற அடுத்த நாளே என்னைத் தொலைபேசியூடாக அழைத்து 'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதனால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக்' கூறினார். மேலும், தாக்குதலுடன் தொடர்புடைய அவரின் சிநேகிதர்களை கைதுசெய்வதவற்கும், காட்டிக்கொடுப்பதற்கும், தயங்கிய கோத்தாபய விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தடையாக இருந்தமையும் எனக்கு நினைவில் உள்ளது.

தாக்குதல் குறித்து முன்னெடுக்கப்பட்ட முதல் விசாரணைகளின் ஒரு பிரதியை வழங்கிய அவர் மற்றைய பிரதிகளை வழங்க மறுத்தமை நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் இதுகுறித்து அக்கறையின்மையுடன் செயற்பட்டமையும், முறையான விசாரணைகளை முன்னெடுக்கத் தவறியமையையும், அவரது அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் 6 பேர் கொண்ட குழுவினரை விசாரணை நடத்த நியமித்தமை போன்றவை அவர் தேர்தலுக்கு முன் எமக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியமையை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், இந்தத் தாக்குதல் குறித்து தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுத்து வந்த அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்கியமை, அக் குழுவின் தலைவரை சிறையில் அடைத்தமை மற்றும் மற்றொரு அதிகாரியை இடமாற்றம் செய்தமை, தனக்கு சிநேகபூர்வமான நபர்களை விசாரணைகளுக்காக நியமித்தமையும் என்பன, விசாரணைகளை சுக்குநூறாக்கினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து கோத்தாபய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மந்தமான விசாரணைகள் எம் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதனிடையே சுதந்திரமானதும், சுயாதீனமானதும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு, அருட்தந்தையர்கள் மற்றும் மதபோதகர்கள் 34 பேரின் கையெழுத்துடன் 2021ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்துக்கு எந்தவொரு பதிலும் கிடைக்க வில்லை. அந்தக் கடிதம் தனக்கு கிடைத்தது என்றவொரு பதில் கடிதம்கூட வரவில்லை.

மேலும், 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23ஆம் திகதி புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கும் இது குறித்தான இரண்டாவது கடிதத்தை அனுப்பிவைத்தோம். அவரிடமிருந்தும் எமக்கு எந்தவொரு பதில் கடிதமும் கிடைக்கவில்லை.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து, நீதியான-நியாயமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என நாம் எவ்வளவு வலியுறுத்தியும், இந்த அரசாங்கம் அதனை சிறிதளவேணும் கண்டுகொள்ளாமல் இருப்பது, இதற்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பது எமக்கு தெளிவாகத் தெரிகிறது.

இந்த விடயத்தினை மூடிமறைக்க முயற்சிக்கும், இருந்த அரசாங்கமும் இருக்கின்ற அரசாங்கமும் தொடர்ச்சியாக ஆட்சி செய்தால், தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களும், நிறுவனங்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்பது எமக்கு இருக்கிற மிகப் பெரிய சந்தேகமாகும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை முஸ்லிம் தீவரவாதிகள் நடத்தியுள்ளமை உண்மை. ஆனால், அவர்களுக்குப் பின்னால் பலமான சக்தியொன்று இருப்பதற்கான சாட்சி இருக்கும் பட்சத்தில், அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படாது, சாட்சிகளை புதைக்க தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது. இவ்வாறான ஒரு தாக்குதல் நடக்கப்போகிறது என்பதை அறிந்தும் அதனைத் தடுப்பதற்கு எவ்வித முயற்சிகளையும் எடுக்காது இருந்த அரசியல் தலைவர்களுக்கு எதிராக நீதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரும் ஹயாஷி யொஷி



கடன் மறுசீரமைப்புச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கையா?

**கொழும்பு, ஏப். 22**

**ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா எதிர்வரும் மே மாத முற்பகுதியில் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.**

அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா கடந்த ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தார். ஜப்பானிய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைக்கான அவரது முதலாவது பயணமாக அது அமைந்திருந்தது.

அதன்போது கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, அனைத்துக் கடன்வழங்குநர் நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மை வாய்ந்த கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இலங்கையின் கடன்மறுசீரமைப்பில் முன்னணியில் நின்று செயற்படுபவராகவும் அவர் அறியப்படுகின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அவருடைய மறுவருகை இலங்கையின் கடன்மறுசீரமைப்பின் அடுத்தகட்டங்களை மையப்படுத்தியதாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (ம)

## ரணில் - பஸில் நாளை சந்திப்பு



கொழும்பு, ஏப். 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்சவுக்கும் இடையிலான தீர்க்கமான சந்திப்பொன்று நாளை இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையிலேயே, பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் பற்றி முடிவெடுக்கப்படும் எனத் தெரியவருகின்றது. இதற்கு முன்னரும் பஸில், ரணிலுக்கிடையில் இரு சந்திப்புகள் நடைபெற்றன.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பஸில் வலியுறுத்தியிருந்தார். எனினும், ஜனாதிபதி ரணில் அதற்கு உடன்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் இடம்பெறவுள்ள இந்தத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியதாக இருக்கலாம் என்றும், பொதுவேட்பாளர், வேட்பாளர் போட்டியிடவுள்ள சின்னம் உள்ளிட்ட விடயங்கள் இதில் கருத்திற் கொள்ளப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)

## கோர விபத்து: குடும்பத்தவர் மூவர் பலி!

கொழும்பு, ஏப். 22

முச்சக்கரவண்டி - கொள்கலன் நேருக்குநேர் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று எல்பிட்டிய - அவித்தாவ பிரதான வீதியில் நடந்துள்ளது.

விபத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியான மூன்று பிள்ளைகளின் தந்தையும் அவரது பேரன் (வயது-10), பேர்த்தி (வயது-07) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## சீன உயர் தலைவர் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, ஏப்.22

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் துணை அமைச்சர் சன் ஹையன் இருநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நாளை இலங்கைக்கு வரவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரைச் சந்தித்து இவர் கலந்துரையாடவுள்ளார். சீனா இதுவரையில் இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உறுதியான உத்தரவாதத்தை வழங்கவில்லை. (எ-இ)

பிரதான அரசியல் கட்சிகள்

## மேதினக் கூட்டத்தில் பலம்காட்டத் திட்டம்!

கொழும்பு, ஏப். 22

மே தினக் கூட்டத்தையும், பேரணியையும் தமது அரசியல் பலத்தை வெளிப்படுத்துவதற்கான களமாகப் பயன்படுத்திக்கொள்வதற்குப் பிரதான அரசியல் கட்சிகள் தயாராகிவருகின்றன.

செப்ரெம்பர் மாதம் இறுதியில் அல்லது ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் இம்முறை மே தினக் கூட்டம்கூட, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்ப கட்ட பரப்புரை கூட்டமாகவே அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

69 இலட்சமாக இருந்த பெரமுனவின் வாக்கு வங்கி சடுதியாகக் குறைவடைந்துள்ளது எனவும், அந்தக் கட்சியால் ஆட்சிபீடமேற முடியாது எனவும் பரவலாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், தமக்கு மக்கள் பலம் உள்ளது என்பதை காண்பிக்கும் வகையில் மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கு பெரமுன வியூகம் வகுத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்தே மே தினக் கூட்டத்தை நடத்துகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அமையவுள்ள கூட்டணிக்கான சமிக்ஞையும் இதன்போது வெளிப்படுத்தப்படவுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் தமக்கான மக்கள் ஆதரவு அலை அமோகமாக உள்ளது என்பதை வெளிப்படுத்தும் வகையில் மேதினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தவுள்ளன. (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினம் தெரியுமோ?

இப்ப கன கோயில்களில திருவிழாக்காலம். ஊர்வழியளில எங்க திரும்பினாலும் திருவிழாத்தான். இப்ப கோயில்களில திருவிழா எண்டால் முதல்ல எல்லாருக்கும் சாமியை விடவும் லவுட்ஸ் ஸ்பீக்கர்தான் நினைவுக்கு வரும்போல. சாமிக்கு பூசைச் சாமான் இருக்கோ, இல்லையோ எண்டு அக்கறைப்படுறதை விடவும், 'எங்கட கோயில் பீக்கர் ஊர் முழுக்கக் கேக்கோணும்' எண்டு பவர் காட்ட நினைக்கிறதுதான்கூட. நாளொரு திருவிழாவும் பொழுதொரு லவுட் ஸ்பீக்கருமா இந்தத் தம்பட்டமடிப்பு கூடிக்கொண்டே போகும்.

அநேகமான ஊர்களில கிட்டக்கிட்டவா உள்ள ரண்டு மூண்டு கோயில் இருந்து, அந்த மூண்டு கோயில்லயும் ஒரேநேரத்தில திருவிழாவும் வந்தால், அவ்வளவுதான் கதை. திருவிழா முடிஞ்சபிறகு எல்லாரும் செவிட்டு மிசின் பூட்டிக்கொண்டு திரியவேண்டிய அளவுக்கு, காதுச் செவிப்பறை கிழிஞ்சிருக்கும். ஏதோ சாமியளுக்குள்ள சண்டை எண்ட கணக்கில ஒவ்வொரு கோயில்காரரும் மற்றக் கோயில் லவுட் ஸ்பீக்கர் சத்தத்தைவிட தங்கட லவுட் ஸ்பீக்கர் சத்தம்தான் மேவிக் கேக்க வேணும் எண்டு படாதபாடுபடுவினம். விடியப்பிறம் நாலுமணிக்கே அலறத் தொடங்கிற லவுட் ஸ்பீக்கர்களின்ர வாய், சாமம் தாண்டியும் ஓயாது. இந்த லவுட் ஸ்பீக்கருக்குள்ள ஏப்பிட்டு சின்னாபின்னமாகிறது பள்ளிக்கூடப் பிள்ளையள்தான். அதுவும் ஓ.எல். எக்ஸாமுக்கு இன்னும் ரண்டு கிழமைதான் இருக்கு. எக்ஸாம் நெருங்க நெருங்கத்தான் ஓ.எல். பிள்ளையளுக்கு கூடநேரம் படிக்க வேணும் எண்ட பயம் வரும். இந்தக் கடைசி நேரத்தில படிக்கிறதுதான் பிள்ளையளுக்கு மனசில நிக்கும். நல்ல ரிசல்ட் எடுக்கிறதெல்லாம் இந்தக் கடைசி ரண்டு கிழமைப் படிப்பிலதான் தங்கியிருக்கு. ஆனால் கோயில்காரருக்கு அதைப்பற்றியெல்லாம் அக்கறையில்லை. 'எக்ஸாமாவது மண்ணாங்கட்டியாவது' எண்டிட்டு அவையள் தங்கட பாட்டில, இன்னும் எங்கையெங்க லவுட் ஸ்பீக்கர் கட்டலாம் எண்டு இடம் பாக்கிற வேலையிலதான் பிஸியா இருப்பினம்.

எங்க லவுட் ஸ்பீக்கர் பாவிக்கிறதெண்டாலும் பொலிஸில அனுமதி எடுக்கவேணும். அப்பிடி அனுமதி எடுக்கப் போகேக்க, கோயில்ல இருந்து குறிப்பிட்ட கொஞ்சத் தூரத்துக்குத்தான் லவுட் ஸ்பீக்கர் சத்தம் கேக்க வேணும் எண்டு அனுமதி குடுக்கிறவை. ஆனால் அப்பிடி அனுமதி வாங்கிப் போட்டு, வங்களா விரிகுடா மட்டும் குழாயைக் கட்டி, கெத்துக்காட்டுறதுதான் வாடிக்கை. இதுகளை எங்கட பொலிஸ்காரரும் கண்டுகொள்ளாயினம். ஆர்ப்பாட்டம், நினைவேந்தல் எண்டால் மட்டும் பாய்ஞ்சு பாய்ஞ்சு கோர்ட்ஸில கேஸெல்லாம்போட்டு, அரெஸ்ட் பண்ணத் தெரிஞ்சவைக்கு, இப்பிடி சின்னப்பிள்ளையளின்ர படிப்பைக் குழப்பிறமாதிரி, அனுமதியைமீறி, கோயில்களில அலறுற லவுட் ஸ்பீக்கர்கள் கண்ணுக்குத் தெரியாதது அதிசயம் தான்.

-பட்சி

padsi@uthayan.com

# குரோதி : புதுவருடப் பலன்கள்






ஏர்முனையாக இருந்தாலும், போர் முனையாக இருந்தாலும் எதிலும் முதலில் நிற்கும் சிம்ம ராசியினரே! உங்கள் ராசிக்கு பதினொராவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சோம்பல் நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். சுருங்கிய முகம் மலரும். கடந்த வருடத்தில் வாட்டிவதைத்தப் பிரச்சினைகளுக்கு இந்த வருடத்தில் தீர்வு கிடைக்கும்.

சித்திரை, வைகாசி, ஆடி மாதங்களில் உங்களின் அடிப்படை வசதிகள் பெருகும். சிலருக்கு வெளி நாடு செல்லும் வாய்ப்பு வரும். 30.04.2024 வரை உங்கள் ராசிக்கு குருபகவான் 9இல் நிற்பதால் பிரச்சினைகளைத் தொலைநோக்குப் பார்வையுடன் தீர்க்கும் சூட்சுமத்தை உணர்வீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும்.

01.05.2024 முதல் வருடம் முடியும் வரை குரு 10ஆம் வீட்டில் நுழைவதால் சில நேரங்களில் ஏமாற்றங்களை உணர்வீர்கள். சட்டத்துக்குப் புறம்பான வகையில் செயற்படுபவர்களுடன் எந்த நட்பும் வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவீர்கள். உங்கள் திறமையையும், உழைப்பையும் வேறு சிலர் பயன்படுத்தி முன்னேறுவார்கள்.

இந்த வருடம் முழுக்க சனி உங்கள் ராசிக்கு 7இல் அமர்ந்து கண்டகச் சனியாகத் தொடர்வதால் முன்கோபம் அதிகமாகும்.

வியாபாரத்தில் ஏற்றஇறக்கங்கள் இருந்துக் கொண்டேயிருக்கும். புது சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். இடமாற்றம் உண்டு. உங்களுக்கு முக்கியத்துவம் அதிகமாகும்.

இந்த தமிழ் புத்தாண்டு முற்பகுதியில் சின்னச் சின்ன முடக்கங்களையும், சங்கடங்களையும் தந்தாலும், மையப்பகுதியில் வருங்காலத் திட்டங்களை ஓரளவு நிறைவேற்றித் தருவதாக அமையும்.



இரட்டை இராஜ கோபுரங்களுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் கைதடி வீரகத்திப் பிள்ளையாரின் இரதோற்சவத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

# கைதடி வீரகத்திப் பிள்ளையாரின் இரதோற்சவம் இன்று!

யாழ்ப்பாணம் - கைதடிப் பாலத்திலிருந்து இடது பக்கமாகத் திரும்பிப்பார்க்கும்போது அழகிய இரட்டைக் கோபுரங்களுடன் கடற்கரை வெளியே கிழக்குப்புறமாக பிரதான வாயில்களுடன் காட்சி தரும் அற்புதங்கள் நிறைந்தவர் கைதடி வீரகத்திப்பிள்ளையார். வரலாற்றின் பதிவுகளிலிருந்து ஆலயத்தின் பூர்வீகம் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற் பகுதி என அறியக்கூடியதாக உள்ளது. இந்த ஆலயத்துக்கு அண்மையாக யோகர் சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் போன்ற ஞானிகளும், சித்தர்களும் மடம் அமைத்து வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதற்கு ஆலயத்துக்கு அருகிலே இன்றுவரை பேணிப் பாதுகாக்கப்படும் அந்த சுவாமிகளின் மடம் சான்று பகிர்கின்றது.

கிழக்குப்புறமாக பிள்ளையார், இராமலிங்க சுவாமி (சிவன்) இரட்டைக்கருவறையுடன் காட்சி தரும் அதேவேளை, தெற்கு வாயிலை நோக்கி அம்பாளுக்குத் தனியான கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இப்படியாக ஒரு கோயிலின் கருவறையுடன் அருகே இன்னொரு கோயில் கருவறையும் இணைந்து இரட்டைக் கருவறைகளைக்கொண்ட கோயில் கட்டப்பட்டமையானது ஈழத்தில் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோவிலின் கட்டட அமைப்புக்கும், இந்தப் பிள்ளையாரின் கோவில் கட்டட அமைப்புக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளது. அருள்பாலித்துக்கொண்டிருக்கும் இரட்டைக்கோபுர வீரகத்திப்பிள்ளையாருக்கு இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு இரதோற்சவம் நடைபெறுகின்றது. அதிகாலை நான்கு மணியிலிருந்து கைதடி மக்கள் மட்டுமல்ல பிற ஊர்களிலிருந்தும் பிள்ளையாரைத் தரிசிப்பதற்காக அலை அலையாக வருவார்கள்.

அழகான சித்திரத்தேரிலே பஞ்சமுக விநாயகர் மெல்லமெல்ல அசைந்து அசைந்து வலம்வரும் காட்சி ஆனந்தமானது, மெய் சிலிர்க்க வைப்பது. அண்ணன் விநாயகரின் திருத்தேருக்குப் பின்னால் தம்பி முருகன் வள்ளி, தெய்வானையுடன் அழகான சிறிய தேரில் எழுந்தருளி வலம்வருவார். வீதிகள் தோறும் மலைபோல குவிக்கப்பட்டிருக்கும் தேங்காய்கள் அடிக்கப்பட, பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப்பிளக்க, மேள, தாள, நாதஸ்வர ஒலிகளும், பஜனைக் குழுவினரின் பக்திப் பாமாலைகளும் மெய் சிலிர்க்க வைக்க அங்கப்பிரதிஷ்டைகளும், அடி அளிப்பவர்களினதும் வேண்டுதல்கள் ஒருபுறம் உள்ளத்தை உருக்க, வரிசை வரிசையாக வரும் தூக்குக்காவடிகள், செடில் காவடிகள், பால் காவடிகள் எடுக்கும் அன்பர்களின் பக்திப்பரவசமான காட்சிகளுக்கு மத்தியிலே அழகாக செப்பனிடப்பட்ட தேரோடும் வீதியின் ஓரங்களில் பூமரக்கன்றுகளின் அழகிய காட்சிகளினூடாக எம்பெருமான் வலம்வந்து பரந்த கடற்கரை வெளியிலே அருட்காட்சி புரிவதானது இந்திரலோக காட்சியாகவே பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தும்.

பிள்ளையாரின் தீர்தோற்சவமானது சித்திரைப் பூரணை அன்று நடைபெறுவது வழமை, இந்தத் தீர்த்த உற்சவம்கூட மிகவும் சிறப்பாக புனரமைக்கப்பட்ட 'அஸ்வத்த புஸ்கரணி' என்ற நாமத்துடன் காட்சிதருகின்ற தீர்த்தக்கேணியில் மிகவும் பக்தி பூர்வமாக நடைபெறும். சகல நன்மைகளும் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ்ந்து அவன் திருவடிகளைப் பற்றுவோமாக.

[illegible]-

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும் . விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே இருக்கும். புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**இடபம்:** அசதியும் சோர்வும் நிறைந்திருக்கும். மகிழ்ச்சியுமாகக் காணப்படுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செயல்களில் துணிச்சல் வெளிப்படும். சிறுசிறு பிணக்குகள் மறையும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். அம்பிகையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** நிதானம் தேவை. வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமை அவசியம். செலவு செய்யவேண்டிவரும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

**கன்னி:** சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும் நல்லநாள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். காரியம் அனுகூலமாகும்.

**துலாம்:** குடும்பத்தினரால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். கையிருப்பு கரையும். எதிர்பார்த்த காரியம் முடிவடையும். பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பீர்கள் உழைக்க வேண்டி இருக்கும். ஆஞ்சநேயரை வழிபடுவது சிறப்பு.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகம் நிறைந்திருக்கும் நல்ல நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

**மகரம்:** சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கனிவாக நடந்துகொள்வீர்கள்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியநாள். திடீர்ச் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். விற்பனை வழக்கம்போலவே இருக்கும். பணியாளர்களுக்காகச் செலவு செய்ய நேரிடும்.

**மீனம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நீண்ட நாள்களாகத் திரும்பிச்செலுத்த நினைத்த கடனைத் தந்து முடித்து நிம்மதியடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வலி ஒன்று; நீதி இரண்டா ?

இலங்கை வலியுறுத்திய நிலைப்பாடு ஒன்றுக்காக, ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கின்றது என்றால், அதை நம்ப முடியுமா? நம்பித்தான் ஆகவேண்டும். ஜனாதிபதி ரணில், மீண்டும் மீண்டும் வலியுறுத்திய சித்தாந்தங்களும் தீர்வுத் திட்டங்களும்தான் ஐ.நா.வில் இன்றைய அரசியலும், பேசுபொருளும், விவாதப் புள்ளியும், எல்லாமும்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு இடையிலான மோதல்கள்முற்றாகமுடிவுக்குக்கொண்டுவரப்பட்டு, அங்கு நிரந்தர அமைதியும் ஆக்கிரமிப்புகளும் தவிர்க்கப்படவேண்டுமாயின், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் என்ற இருநாடுகள் மலரவேண்டும் என்று அண்மையில் வலியுறுத்தியிருந்தார் ஜனாதிபதி ரணில். 'சுதந்திர பலஸ்தீனம்' மலர்ந்தால் பலஸ்தீனத்துக்கு என தனி இராணுவம் தோற்றம் பெறும். பலஸ்தீன இராணுவத்துடன் ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகள் கூட்டணிகளை (நேட்டோ போன்று) ஏற்படுத்திக்கொண்டால் அது இஸ்ரேலின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தும். இன்று ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு நேட்டோ வழங்கும் இராணுவ உதவிகள்போன்று, நாளை இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீன இராணுவத்துக்கு வெளிப்படையான உதவிகள் வழங்கப்பட்டால், 'தான் அழிந்துபோவேன் அல்லது அமிழ்ந்துபோவேன்' என்பதுதான் சுதந்திர பலஸ்தீனத்தை இஸ்ரேல் தன் முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி எதிர்க்கக்காரணம்.

உலகின் உச்சபட்ச இராஜதந்திரமும், கருத்துத் தெரிவிக்க அசட்டுத்துணிவும் தேவையான இந்த விடயத்தில், இஸ்ரேல், அமெரிக்காவின் முகங்களை முறிக்காமல் அவற்றை நேருக்குநேராகச் சந்தித்து சுதந்திர பலஸ்தீனத்தை வலியுறுத்திய வெகுசில தலைவர்களில் ரணிலும் ஒருவர். குறைந்தபட்சம் 'ஆயுதங்கள் தாங்கிய இராணுவத்தினர் அற்ற சுதந்திர பலஸ்தீனமாவது உருவாக்கப்படவேண்டும்' என்பது ரணிலின் திருத்தப்பட்ட கொள்கையாகவிருந்தது. அதுதான் இன்று உலகில் பல நாடுகளாலும் 'பொதுத் தீர்வுத்திட்டமாக' பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகவும் இருக்கின்றது. ஓர் இராஜதந்திரியாக, முதிர்ச்சிமிக்க தலைவராக, அனுபவ ரேகைகளைத் தாங்கியவராக ரணிலை இந்த விடயத்தில் எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும்.

ஆனால், இந்த விடயத்தில் ரணில் சொல்ல மறந்த அல்லது உணர மறுத்த கதையொன்றும் உள்ளது. யூத சித்தாந்தங்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புகள் இன்று பலஸ்தீனர்களை எவ்வளவுக்கெவ்வளவு வதைத் தெறிகின்றனவோ அதைவிட ஒருபடி மேலாகத்தான் பௌத்த சித்தாந்தத்தின் ஆக்கிரமிப்புகளால் ஈழத் தமிழர்கள் அனுபவித்த-அனுபவிக்கின்ற வேதனைகள் உள்ளன. அவை வார்த்தைகளால் அளந்தெழுத இயலாதவை - முடியாதவை. அங்கு பலஸ்தீனர்கள், இங்கு ஈழத்தமிழர்கள், அது மத்திய கிழக்கு, இது தெற்காசியா, அங்கு யூத ஆக்கிரமிப்பு, இங்கு பௌத்த ஆக்கிரமிப்பு. அவ்வளவும்தான் வேறுபாடு. மற்றும்படி வலி ஒன்றுதான், வதை ஒன்றுதான்.

தன் நாட்டில் உள்ள ஓர் இனக்குழுமம் நீதியைத் தேடி உழன்றுகொண்டிருக்கையில், அதற்கு ஒரு நிரந்தரத்தீர்வை வழங்காமல், எல்லைகளுக்கு அப்பாற்பட்டு நீதியைத் தேடத் தொடங்குவதெல்லாம் சுத்த அபத்தம். தமிழர்களுக்கு நீதியை வழங்கிவிட்டு, தன்னையும் தன் நாட்டையும் சான்றாகக் காட்டி தன் விவாதப்புள்ளியை ரணில் எண்பித்திருப்பாராயின் மட்டுமே அது அவரது இதயத்தில் இருந்து வெளிவந்த வார்த்தைகளாக இருந்திருக்கும்...!




# மறுசீரமைப்புகளால் நிதி நிலைமை ஸ்திரம்

## பரிஸ் கிளப் தெரிவிப்பு

Club de Paris
Paris Club

**கொழும்பு, ஏப்.22**

**கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதைப்போன்று இலங்கையின் கடன் நிலைபேறான தன்மைக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பரிஸ் கிளப்பின் இணைத் தலைவரும், பிரான்ஸ் பல்தரப்பு விவகாரம்,வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி கொள்கை திணைக்களத்தின் உதவிச் செயலாளருமான வில்லியம் ரூஸ் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவில் இடம்பெறும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அரையாண்டு வசந்தகால மாநாட்டில் கலந்துகொண்டுள்ள விலியம் ரூஸ், இலங்கை நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவிடம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய மறுசீரமைப்புக்களால் இலங்கையின் நிதி நிலைமை ஸ்திரமடைந்துள்ளது. அதனால் பொருளாதார மறுசீரமைப்புகளை மீளாய்வு செய்யாமல் தொடர்ந்து முன்னெடுப்பது அத்தியாவசியமானது என்றும் விலியம் ரூஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சுற்றுலாவிகளைச் 'சுற்றினால்' கடும் சட்டநடவடிக்கை பாயும்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் மோசடி செய்யும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளிடம் அதிகளவான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இது தொடர்பில் அடையாளம் காண்பதற்காக சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சதொச ஊடாக பெ. வெங்காயம்

கொழும்பு, ஏப். 22

இந்தியாவிலிருந்து பெரிய வெங்காய இறக்குமதியை லங்கா சதொச நிறுவனத்தினூடாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சதொசவின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

# கல்வித்துறைக்கு கனடா பங்களிப்பு

இலங்கையில் கல்வித்துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தகவல் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு கிடைக்கவுள்ளது என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில்பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ச-இ)

# 40,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 22

நாட்டிலுள்ள பாடசாலைகளில் மொத்தமாக 40 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் சுமார் 7 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 3ஆயிரத்து 800 ஆசிரியர்களுக்கும் வடமத்திய மாகாணத்தில் 3 ஆயிரத்து 698 ஆசிரியர்களுக்கும் தென்மாகாணத்தில் 3ஆயிரத்து 100 ஆசிரியர்களுக்கும் மத்திய மாகாணத்தில் சுமார் 6 ஆயிரத்து 200ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

**நாளை**

23.04.2024

**செவ்வாய்க்கிழமை**

**சித்திரை - 10**

சுபநேரம் : 10.30 - 12.00

ராகுகாலம் : 03.00 - 04.30

சித்திரா பூரணை விரதம்

**நாளொரு நல்வார்த்தை**

**எவனையும் வெற்றுக் காகிதம் என எண்ணாதே. ஒருநாள் அவன் பட்டமாய் பறப்பான். நீயும் அண்ணாந்து பார்க்க வேண்டும்.**

**-பாரதியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக் இராணுவத்தளத்தில் தீவிர வான்வழித் தாக்குதல்

ஈராக், ஏப். 22
மத்திய கிழக்கில் தொடர்ந்துவரும் பதற்றங்களுக்கு மத்தியில் ஈராக்கிலுள்ள இராணுவத்தளமொன்றின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலால் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று ஈராக்கிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் இராணுவத்தளம் ஈரானின் ஆதரவு பெற்ற இராணுவப் பிரிவைச் சேர்ந்தவர்களுடையது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


அமெரிக்காவே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று ஈராக்கின் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கா இந்தக் குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது. (ம)



## பாகிஸ்தானில் வெள்ளம்

இஸ்லாமபாத், ஏப். 22
பாகிஸ்தானின் வடமேற்கு மாநிலமான கைபர் பக்துன்கவாவில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கனமழையால் அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)



## சீன நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடை!

பீஜிங், ஏப். 22
சீனாவைச் சேர்ந்த மூன்று நிறுவனங்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு ஏவுகணை தொழில்நுட்பங்களை இரகசியமாக வழங்கியமைக்காக இந்தத் தடையை அமெரிக்கா விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் நீண்டதூர ஏவுகணைகளை பாகிஸ்தானுக்கு வழங்கியதாகவும் அந்த நிறுவனங்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. பாகிஸ்தானுக்கு சீன நிறுவனங்கள் தொடர்ச்சியாக தொழில்நுட்ப உதவிகளை சட்டங்களுக்கு அப்பாற்பட்டு வழங்கிவருகின்றன என்று தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது.

இந்தத் திரைமறைவு நடவடிக்கைகளால் இந்தியா இலக்காக்கப்படலாம் என்ற அச்சம் கடந்த காலங்களில் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அமெரிக்கா இந்தப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மத்திய கிழக்கில் தணியும் பதற்றம்

### ஈரானையும் இஸ்ரேலையும் மோதவிட பொம்மை ஏவுகணை

**தெஹ்ரோன், ஏப். 22**
**ஈரானுக்குள் நடத்தப்பட்ட தாக்குதல் இஸ்ரேலால் நடத்தப்பட்டது அல்ல என்று ஈரான் வெளிவிவகாரத்துறை அறிவித்துள்ளது.**

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் மோதல் போக்கை ஏற்படுத்த வேண்டும் என்று கருதும் சில தரப்புகளால் இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளதாகவும், அத்துடன் அந்த ஏவுகணைகள் ஆபத்தை ஏற்படுத்தும் ஏவுகணைகள் அல்ல. பொம்மை ஏவுகணைகள் என்றும் ஈரான் வெளிவிவகாரத்துறை அறிவித்துள்ளது.

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் போர்த் தந்திரிகள் மற்றும் இராணுவத் தளபதிகள் உள்ளடங்கலாக 11 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் உள்ள இராணுவத்தளத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியிருந்தது.



இதையடுத்து ஈரானுக்குள் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அவை வானில் வைத்து சுட்டுவீழ்த்தப்பட்டன என்று ஈரான் அறிவித்தது. இஸ்ரேலே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும், இதனால் போர் ஏற்படவுள்ளதாகவும் கருதப்பட்ட பின்னணியிலேயே, இந்தத் தாக்குதல் இஸ்ரேலால் நடத்தப்பட்டது அல்ல என்று ஈரான் வெளிவிவகாரத்துறை அறிவித்துள்ளது. (ம)



## கேஜ்ரிவாலைக் கொல்ல திஹார் சிறையில் சதி!

புதுடில்லி, ஏப். 22
புதுடில்லியின் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை, திஹார் சிறைக்குள் வைத்துக் கொல்வதற்குச் சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆம் ஆத்மி கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

புதுடில்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் புதுடில்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் அமலாக்கத்துறை அதிகாரிகளால் அண்மையில் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய திஹார் சிறையில் விளக்கமறியல் கைதியாக உள்ளார். இந்த நிலையிலேயே, கேஜ்ரிவாலைக் கொல்வதற்கு சிறையில் சதிநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ஆம் ஆத்மி குற்றஞ்சாட்டியுள்ளது.

கேஜ்ரிவாலுக்கு நீரிழிவு நோயுள்ளது. இதனால் அவருக்கு இன்சுலின் மருந்து வேண்டும் என்றும் குடும்ப மருத்துவருடன் வீடியோ மூலம் ஆலோசனைபெற அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், சிறைநிர்வாகம் இதை ஏற்க மறுத்துவிட்டது. கேஜ்ரிவால் மெதுவாக மரணமடையவேண்டும் என்பதற்காக சிறையில் சதி நடக்கிறது என்று ஆம் ஆத்மி கட்சியின் பேச்சாளரும் புதுடில்லி மாநில அரசாங்கத்தின் அமைச்சருமான சவுரவ் பரத்வாஜ் தெரிவித்துள்ளார். (ம)

# ஒவ்வொரு 10 நிமிடத்துக்கு ஒரு பலஸ்தீனக் குழந்தை பலி

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்திவரும் போரில் ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் காஸாவில் ஒரு குழந்தை போரால் உயிரிழக்கிறது அல்லது படுகாயமடைகிறது என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் கவலை தெரிவித்துள்ளது.

காஸா மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல் சமீபத்தில் உச்சத்தை தொட்டிருக்கிறது. இதுநாள்வரை இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்ற அமெரிக்காகூட, உடனடியாகப் போரை நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. ஆனால், போர் தற்போதுவரை நிற்கவில்லை. 34,000க்கும் அதிகமானவர்கள் இந்தப் போரில் உயிரிழந்துள்ளனர். இதில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்களும், குழந்தைகளும்தான். அத்துடன் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் உணவு கிடைக்காமல் அடுத்தடுத்து உயிரிழக்கின்றனர் என்றும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. (சு-இ)

## சனாதன தர்மத்தை ஒழிக்குக

### உதயநிதியின் கருத்துக்கு வலுக்கின்றது எதிர்ப்பு

புதுடில்லி, ஏப். 22
சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என பேசியதற்காக தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை தண்டிக்க வேண்டும் என்று தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

மே மாதம் 13ஆம் திகதி தெலுங்கானாவில் ஒரேதடவையில் வாக்குப்பதிவு இடம்பெறவுள்ளது. தேர்தல் பரப்புரைகள் அங்கு தீவிர கதியில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, 'இண்டியா' கூட்டணியின் சக பிரதிநிதியைத் தண்டிக்கவேண்டும் என தெலுங்கானா மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக்கட்சிக்கு தலைமை தாங்கேன்

## பொன்சேகா அறிவிப்பு

சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவி என்னிடம் வழங்கப்பட்டாலும் அதனைப் பொறுப்பேற்பதற்குத் தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சிக்குள் முன்னெப்போதும் இல்லாத வகையில் உட்கட்சி மோதல்கள் தீவிரம் பெற்றுள்ளன. இதனால் சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவி தொடர்பில் தீவிரமான கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே பொன்சேகா இவ்வாறு தெரிவித்துள்ளார். ‘சந்திரிகா அம்மையார் நீண்ட காலம் அரசியல் செய்தவர். எனவே, சுதந்திரக்கட்சியில் அவர் போஷகர் என்ற பதவி நிலையில் இருக்கவேண்டும். அந்தப் பதவியில் இருந்து தேவையான ஆலோசனைகளை வழங்கலாம். மைத்திரிபால சிறிசேன பற்றி என்னிடம் எதுவும் கேட்கவேண்டாம். அவர் பற்றி கருத்து வெளியிட்டு எனது நேரத்தை வீணடிக்கத் தயாரில்லை. அதேவேளை, மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் செல்வதற்கு நான் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் களனி அமைப்பாளர் என்ற வகையில் அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்தி லேயே பங்கேற்பேன் எனவும் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (ம-44)



உண்ணா நோன்பி ருந்து தன்னுயிர் நீத்த நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு, தீவகம் வேலணை துறையூர்ப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ மகா காளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் திரு மஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. அடியவர்கள் புடைசூழ மின்குமிழ்களால் அலங்கரிக் கப்பட்ட புதிய திருமஞ்சத் தில் அம்பாள் பவனி வந்தார். (ச-66)

**கார்/ வான் வாடகைக்கு**

கார், வான் வாடகைக்கு விடப்படும்

**077 898 9691**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By ந.விக்கினேஸ்வரன் ஆச்சார்யார். குபேரன் கட்டட மாடி, பிரான் பற்று வீதி, சங்கானை.

தொடர்புகளுக்கு: **077 675 1649**

**வேலையாட்கள் தேவை [பெண்]**

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கோ அல்லது உதவியாளர்களாகவோ வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள முடியும்.

(CS 54784) (N-1)

**076 363 1895**

**வேலையாட்கள் தேவை [பெண்]**

தனியார் நிறுவனம் ஒன்றின் கைதடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு இனிப்பு சிற்றுண்டிப் பண்டங்கள் தயாரிப்பதற்கு உதவியாளர்களாக வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.

(cs54784) (N-1)

**074 391 0843**

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

**பெறுகை அறிவித்தல்**

**வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல் - 2024/2025**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் 2024 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/1/OS/01 | பாதுகாப்புச் சேவை | 04 |

1. சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 2 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 22.04.2024 ஆம் திகதி தொடக்கம் 06.05.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 03.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 07.05.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தலைவர் உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு. வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை. மானிப்பாய்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

(cr.41586) (N-1)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06, ஆள்காட்டி வளவு ஒழுங்கை. 50/15ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் க.சோமசுந்தரமும் பெண் கனகம்மாவும் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் பொன்னையா ஏரம்புவும், பொன்னையா செல்லையாவும், பொன்னையா இராசையாவும், பொன்னையா கிருஷ்ணசாமியும், பொன் னையா கைம்பெண் அன்னப்பிள்ளையும் 1967.02.10ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் குமாரசுவாமி முகதாவில் 12876ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் கைலாயபிள்ளை சோமசுந்தரம் பெண் கனகம்மா என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை கயிலாசபிள்ளை சோமசுந்தரமும் பெண் கனகம்மாவும் 2014.08.22 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆதித்தன் கார்த்திகா முகதாவில் 416ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சண்முகலிங்கம் சிறீதரனுக்கும் பெண் வினோதினிக்கும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

12876 ஆம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் சொரியலாய் பத்தில் ஒன்பது பங்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் 416 ஆம் இலக்க உறுதியில் சொரியல் எனக் குறிப்பிடப்படவில்லை.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை தற்காலம் அரியாலை இறை, யாழ் மாநகர சபை வட்டாரம் 09, பிரதேச செயலகம் நல்லூர், கிராம சேவகர் பிரிவு J/96 "ஆத்திக்காட்டு வளவு" நிலப்பரப்பு 4.1/2 உம் வீடும் கிணறும் பயிர்வகைகளும். இந்நிலப்பரப்பு நான்கரைக்கும் எல்லை

**கிழக்கு :** சிவகடாட்சம் பெண் ஜெகதாம்பாளின் ஆதனம்
**வடக்கு :** பூரணாநந்தம் பெண் செல்லம்மாவின் ஆதனம்
**மேற்கு :** ஒழுங்கையும் இரத்தினசிங்கம் பெண் தங்கலட்சுமியின் ஆதனமும்
**தெற்கு :** அருள்வாசகம் பெண் சரஸ்வதியின் ஆதனம்


இதடங்கலும். மேற்படி கிணற்றில் வடக்குக் காணிக்குரிய பங்கும் மேற்கருகால் வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கல்

தற்போது சண்முகலிங்கம் சிறீதரனும் பெண் வினோதினியும் இவ்வாதனத்தை தமது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு தமது தத்து வகாரரான சோமசுந்தரம் திருக்குமார் மூலம் விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகலிங்கம் சிறீதரனும் பெண் வினோதினியும் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(cr.42236) J.1

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 20.06.1993 **மறைவு** 21.04.2024

### ஜெயக்கொடி கௌதமன்

கோட்டைக்காடு மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்கொடி கௌதமன் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜெயக்கொடி - வசந்தராணி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற இராசு-பாக்கியம், வேலுப்பிள்ளை மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் பேரனும், ஜெயவாணி, சுலேக்கா காலஞ்சென்றவர்களான ஜெனார்த்தனன், சஞ்சீவன் ஆகி யோரின் அன்புச் சகோதரனும் நதீசன், ஜெகன் ஆகியோரின் மைத்துனரும், ஜனுஷன், ஜஸ்மி ஆகி யோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தொந்தனை தத்துப்பெட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 54798) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## சங்கமம் - ஊழியர் தின விழா

ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள், 25 வருட கால பல்கலைக்கழக சேவையாற்றிய அங்கத்தவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர் பிள்ளைகள்

**கௌரவிப்பு நிகழ்வும் - ஊழியர் ஒன்றுகூடலும் - 22.04.2024**


### பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவரின் செய்தி




சி. தங்கராஜா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது இன்று பல்கலைக்கழகத்தில் நீண்ட கால சேவை செய்து ஓய்வு பெற்ற மற்றும். பல்கலைக் கழகத்தில் 25 வருடகால சேவை புரிந்த அங்கத்தவர்களினதும் கௌரவிப்பு நிகழ்வையும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்திபெற்ற எமது அங்கத்தவர்களின் பிள்ளைகளின் பாராட்டு விழாவினையும். எம்மால் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வினையும் சிறப்புறக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற்று இவ்வருடம் பொன்விழா ஆண்டில் கால்பதித்துள்ளோம். அன்று தொடக்கம் 1975ம் ஆண்டு அன்று பல்கலைக்கழக சேவையில் இருந்த மூத்த அங்கத்துவ உறுப்பினர்களால் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊழியர் சங்கம் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர்களுக்கு பொன்னான இந்நாளில் நீண்ட காலம் பல்கலைக்கழக சேவையில் தங்களை அர்ப்பணித்து அரும்பாடுபட்டு பணி நிலையில் ஓய்வடைந்திருக்கும் எங்கள் சிரேஷ்ட அங்கத்தவர்களை கௌரவிக்க எமக்கு கிடைத்திருக்கும் இவ்வாய்ப்பானது மகத்துவமானதாகும். பல்கலைக்கழக சேவையில் வெள்ளிவிழா காணும் எமது ஊழியர்களை கௌரவிக்கவும் எமக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. எமது சங்கம் இப் பல்கலைக்கழகத்தில் பெரும் ஆலமரமாக வளர்ச்சி பெற்று பல நெருக்கடியான காலகட்டங்களிலும் ஊழியர் உரிமைகளுக்காக போராடி வருவதுடன் பல்கலைக்கழக சமூகத்தில் நடைபெறும் பொது விடயங்களிலும் தன் காத்திரமான பங்களிப்பினையும் பதிவு செய்துள்ளது. இன்றைய சூழலில் சமூகத்தின் கலாசார விழுமியங்களையும் பண்பாடுகளையும் பல்கலைக்கழகத்தில் கட்டிக் காப்பதில் எமது சங்கம் கவனத்தை செலுத்த வேண்டியும் ஏற்பட்டுள்ளது. மிகவும் உணர்வு பூர்வமான இவ்வேளையில் ஓய்வு பெற்ற எம் ஊழியர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும். சிறப்பானதாகவும் அமைய பிரார்த்திக்கின்றேன். வெள்ளிவிழா சேவையாளர்களும் பல உயர்வுகளை பெற வாழ்த்துகின்றேன். புலமைப்பரிசில் பெற்ற மாணவ செல்வங்களும் இன்னும் பல சிகரங்களை கண்டு தாயகத்தில் தலைநிமிர்ந்து வாழ வாழ்த்துகின்றேன். அத்துடன் விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றிபெற்றோர் வரும் காலங்களில் சிறப்பாக செயற்படவும் வாழ்த்துகின்றேன்

### பல்கலைக்கழக சேவை செய்து ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள் (06.01.2019 இலிருந்து 31.03.2024 வரை)





01. திருமதி.கா.கங்காதேவி
02. திரு.மு.குழந்தைவேல்
03. திரு.சி.முருகையா
04. திரு.மா.காலிங்கராஜா
05. திரு.கி.கமலேஸ்வரன்
06. திரு.இ.பாலச்சந்திரன்
07. அமரர்.க.நந்தகுமார்
08. திரு.க.சோமசேகரம்
09. திரு.க.கமலநாதன்
10. திரு.இ.ஜெகநாதன்
11. திரு.செ.அலெக்சாண்டர்
12. திரு.சி.தெய்வேந்திரா
13. திரு.சி.சிவராசா
14. திருமதி.இ.மாதினி
15. திரு.ந.செந்தில்குமரன்
16. திரு.வ.தேவராஜா
17. திரு.து.ஞானதேசிகன்
18. திரு.பொ.விமலானந்தன்
19. திரு.இ.செல்வரட்ணம்
20. திரு.த.நாகராசா
21. திரு.த.ரவீந்திரன்
22. திரு.இ.உமாசங்கர்
23. திரு.ச.ரவிக்குமார்
24. திரு.அ.மதியழகன்
25. திரு.சி.கணேசலிங்கம்
26. அமரர்.ஆ.தணிகாசலம்
27. திரு.சீ.ஆனந்தராஜா
28. திரு.நா.சேகர்
29. திரு.சி.சிவடேந்திரன்
30. திரு.அ.யோகராஜா
31. திரு.கி.உதயகுமார்
32. திரு.ந.பகீரதன்
33. திரு.க.தங்கராசா
34. திரு.ந.அரியரத்தினம்
35. திரு.ச.செல்வராசா
36. திருமதி.இ.ரஞ்சினி
37. திரு.தி.தவேந்திரன்
38. திரு.ஐ.ஆனந்தராஜா
39. திரு.மா.விஜயகுமார்
40. திரு.க.வரதவேல்
41. திரு.வ.பத்மநாதன்
42. திரு.பொ.அமிர்தராஜா
43. திரு.சீ.மகாலிங்கம்
44. திரு.வே.ஜெயபாலசுந்தரம்
45. திரு.க.தயாபரன்
46. திரு.சி.ஆனந்தராஜா
47. திரு.இ.மதிகரன்
48. திரு.சி.குலேஸ்வரராஜன்
49. திரு.பி.திருக்குமாரன்
50. திரு.க.பரமலிங்கம்
51. திரு.பொ.உதயகுமார்
52. திரு.த.இரத்தினகுணசிங்கம்
53. திருமதி.செ.செல்வஜெயந்தினி
54. திரு.இ.சத்தியேந்திரா
55. திரு.இ.அமிர்தலிங்கம்
56. திரு.நோ.சகாயநாதன்
57. திரு.வீ.ஜெகதாம்பிகைபாகன்
58. திரு.சி.மகாராஜா
59. திரு.இ.சிவனேஸ்வரன்
60. திரு.சி.உமாகரன்
61. திரு.இ.சிவகுமார்
62. திரு.க.லிங்கராசா
63. திரு.கி.வேலானந்தன்
64. திரு.ச.குகன்
65. திரு.அ.சிவானந்தம்
66. அமரர்.தி.ஶ்ரீதரன்
67. திரு.இ.குகதாஸ்
68. திரு.ச.சோமசுந்தரம்
69. திரு.சு.ரவிச்சந்திரன்
70. திரு.கா.நாகேந்திரம்
71. திரு.சி.கதிர்காமநேசன்
72. திரு.செ.சிவலிங்கம்
73. திரு.க.ஜெயந்திரன்
74. திரு.ம.சந்திரகுமார்
75. திரு.அ.தனேஸ்வரன்
76. திரு.செ.சிவகுமார்
77. திரு.ச.சிவலோகநாதன்
78. திரு.க.கனகராஜா
79. திரு.க.ஜெயக்குமாரன்
80. திரு.க.பாலச்சந்திரன்
81. திரு.கா.சத்தியதீசன்
82. திரு.செ.நந்தகுமார்
83. திரு.இ.தவராசா
84. திருமதி.ப.யேசுரெத்தினி
85. திரு.மா.இராசேந்திரன்
86. திருமதி.சி.அனுஷா

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கௌரவிக்கப்படும் அங்கத்தவர் பிள்ளைகள் 2023

01. செல்வி.ய.கிறேஸ் தாணியா
02. செல்வன்.M.M.V.A. பண்டார
03. செல்வன்.மௌ.சுபேதனன்
04. செல்வி.சி.அக்ஷிகா
05. செல்வன்.ம.ஆராதன்
06. செல்வி.ஜ.அபிஷா
07. செல்வி.யோ.தீபிகா
08. செல்வி.சி.லதுசிகா
09. செல்வி.ய.பார்கவி
10. செல்வன்.வி.ஹரிஸ்வின்
11. செல்வன்.தே.தனுமிதன்
12. செல்வி.தி.அக்ஷரா

### 25 வருட பல்கலைக்கழக சேவையை பூர்த்திசெய்த அங்கத்தவர்கள்

01. திரு.கி.புஸ்பரட்ணம்
02. திரு.சி.தர்மசேனா
03. திரு.க.லிங்கராஜா
04. திரு.அ.பாஸ்கரன்
05. திருமதி.சி.மகேசன்
06. திரு.க.நாகேந்திரன்
07. திரு.சி.ஆனந்தராசா
08. அமரர்.சாமுவேல் ஜோன்சன்
09. திரு.ந.அகிலன்
10. திரு.இ.சிவனேஸ்வரன்
11. திரு.தி.உமாசங்கர்
12. திரு.சா.நாகரட்ணம்

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 29.03.2023 அன்று கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர் பிள்ளைகள்

01. செல்வி.ரா.கர்ஷா
02. செல்வன்.சி.சிவாட்சன்
03. செல்வன்.ச.சாயீசன்
04. செல்வி.ச.ஆரவி
05. செல்வன்.பி.தீபிகன்
06. செல்வி.ம.சதுர்சிகா
07. செல்வன்.ச.ஆகாஷ்
08. செல்வன்.ப.திருஷயன்
09. செல்வன்.வ.அபிநயன்
10. செல்வன். அ.சாய்அருள்பிரசாத்
11. செல்வி.சி.கனிஸ்கா
12. செல்வி.ம.யாதவி
13. செல்வன்.ம.கவின்
14. செல்வி.ந.கேசகி
15. செல்வி.ச.அன்சுருதிகா
16. செல்வன்.ச.சாருஜன்
17. செல்வி.ச.பர்விஜா
18. செல்வி.ரா.டஸ்மிகா
19. செல்வன்.ச.கஜானன்
20. செல்வி.இ.கெத்சீயா
21. செல்வன்.த.கவியானன்
22. செல்வன்.இ.லதுஷன்
23. செல்வி.ம.அஸ்மிதா
24. செல்வன்.பி.லிதுசன்
25. செல்வன்.சி.திஷான்
26. செல்வன்.ஐ.கிஷோன்
27. செல்வன்.மு.அபராஜிதன்
28. செல்வி.ஜெ.லாரண்யா
29. செல்வி.ஜெ.லாவண்யா
30. செல்வன்.சி.செந்தாபரன்
31. செல்வன்.எ.திவ்வியகானன்
32. செல்வன்.யோ.எழிலன்
33. செல்வன்.த.கிருஷ்மன்
34. செல்வி.உ.நிலக்ஷா
35. செல்வி.கோ.ரருணிஸ்கா
36. செல்வி.கு.கிருசிகா
37. செல்வன்.சி.சாருஜன்
38. செல்வி.அ.சாருகேசினி
39. செல்வன்.ப.திஷாந்
40. செல்வி.கௌ.அக்ஷயா
41. செல்வி.து.டிலுஷா

**செயற் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் வாக்கு ரணிலுக்கே!

## ஐ.தே.க. உறுதி

கொழும்பு, ஏப். 22

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க எந்தப்பக்கத்தில் நின்று களமிறங்கினாலும், எந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் அவருக்கே வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சஜித்பிரேமதாஸவையோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவையோ நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்கவே சஜித் பிரேமதாஸவுக்குத் தமிழ்மக்கள் ஆதரவு வழங்கினார்கள். எனினும், அவரால் வெற்றிபெற முடியவில்லை. வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீட்டெடுத்த தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமிழர்களின் வாக்குகள் குவியும்- என்றார்.

(ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம்: 14.04.1941    மறைவு: 20.04.2024

### பத்மநாதன் பராசக்தி

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் பெரிய தம்பிரான் வீதி, வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பராசக்தி அவர்கள் கடந்த (20.04.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாதபரன் மற்றும் நாததீபா (ஆசிரியர் - யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), ராகசுதன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலைவாணி, ஷாமளை, சதீஸ்குமார் ஆகியோரின் மாமியாரும், ரிஷிப்பிரசாத், சங்கீத், கவினிஷா, பவநிஷா, ராதுஷாந், ஷாயகி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்
077 6985307

(CS 54798) A-1

## மரண அறிவித்தல்

### பிலிப்புப்பிள்ளை விக்டர் இம்மானுவேல்

(தம்பிஐயா)



மண்ணக வாழ்வில் 05.08.1937    விண்ணக வாழ்வில் 12.04.2024

யாழ்,இளவாலை, பத்தாவத்தையை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் மற்றும் இத்தாலியை (Reggio Emilia) வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை விக்டர் இம்மானுவேல் (தம்பிஐயா) அவர்கள் கடந்த 12.04.2024 வெள்ளிக்கிழமை இவ்வுலக வாழ்வை விட்டு விண்ணக வாழ்வை நோக்கிப் பயணித்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை- ஞானரத்தினம் தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம்-தாங்கம்மா தம்பதிகளின் மருமகனும் பெர்னடேத் தேவநேசம் (பேபி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், பிலிப் சுதா (இத்தாலி), சுபாஜினி (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்), சுகாஜினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி , சேவியர், ஜெனிற்றா , உமேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெசிக்கா, ஜெசோன், இலக்கியா, ஆதவன், அரின், இனியா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், எட்வேட் ராஜா, பிரான்சிஸ் சேவியர், அருட்சகோதரி கயஸின் மற்றும் மேரி திரேசா (பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருட்தந்தை மரியாம்பிள்ளை அவர்களின் பெறாமகனும் காலஞ்சென்ற அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம் அவர்களின் மைத்துனரும், மற்றும் அருட்தந்தை ஜேம்ஸ் சிங்கராயர் (மொன்றியல், கனடா), அருட்சகோதரி வேர்ஜி (Holy cross, யாழ்ப்பாணம்), அருட்தந்தை எட்வினாதன் (புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

இன்று (22.04.2024) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு Santa Maria ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன் பின்பு Via Dino Iugli, Masone, Reggio Emilia. இல் அமைந்துள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இன்று 22.04.2024 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
மகள்: பிலிப் சுதா +393201731260
மகள்: சுபா
மகன்: சுதர்சன் +33767604793
மகள்: சுகா

தகவல்:
குடும்பத்தினர்

(CR 42258) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 15.04.1958



இறப்பு 20.04.2024

### திருமதி புஷ்பராணி வரதராசன்

(ஓய்வு பெற்ற முகாமையாளர் கிராமிய வங்கி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்)

எச்சாட்டி சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஷ்பராணி வரதராசன் 20.04.2024 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வரதராசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை-மருதனாச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற கந்தையா-மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சிந்துஜா (ஆசிரியை யா/மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்), றம்ஜா (முன்னாள் இணைப்பாளர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Rev ஜெயசிறி (போதகர், அசெம்பிளி ஒவ் கோட், சண்டிலிப்பாய்), வில்சன் (பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாம் ஜெபின், ஜெவ்னி, றொய்ஸ்ரன், றொயன்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சறோஜினிதேவி, புஸ்பமலர் (ஓய்வு நிலை உப அதிபர் யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), நந்தினிதேவி (ஆசிரியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற விமலலோஜினி (ஆசிரியை), மற்றும் விமலாம்பிகை (பிரான்ஸ்), ஜெயமுகானந்தன் (கனடா-முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் புனர்வாழ்வு அமைச்சு-இலங்கை), காலஞ்சென்ற ஜெயசிவானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயராஜா (பிரான்ஸ்), பேரின்பநாயகம் (ஓய்வுநிலை மேற்பார்வையாளர் சங்கானை பிரதேச வைத்தியசாலை), தியாகராஜா, தர்மகுலசிங்கம் (சமுர்த்தி முகாமையாளர், உடுவில்), சந்திரகாசன் (பிரான்ஸ்), கரோலின் கதிர்மகள் (கனடா-முன்னாள் ஆசிரியை-இலங்கை), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.04.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எச்சாட்டி
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 896 0396, 077 947 9189

(CS 310) V-1

## மரண அறிவித்தல்



### பொன்னுச்சாமி நாகலிங்கம் (சிவம்)

(ஓய்வுபெற்ற ஆண் பரிசோதகர் - வட்டுக்கோட்டை)

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி நாகலிங்கம் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமகள் அவர்களின் பாசமிகு கணவரும், பாமினி (லண்டன்), நாமகள், பொன்னுச்சாமி (பிரதேச நில அளவை காரியாலயம், திருநெல்வேலி), ஐங்கரன் (இ.போ.ச. காரைநகர் சாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தனேசன் (லண்டன்), பிரதீபன் (இ.போ.ச. காரைநகர் சாலை), தீபாதினி, விஜிதா (ஆசிரியர், யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரணவி, அருண், பிரிட்டி (லண்டன்), கேதாரணி, சுஜானிகா, இசைப்பிரியா ஆகியோரின் பாசமிகு பேரனும், அமரர்களான தர்மலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி மற்றும் கண்ணகியம்மா, யோகம்மா, சரஸ்வதி, நவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர்களான ஆதிலட்சுமி, பொன்னம்பலம், முருகையா, அப்புத்துரை, மகாதேவன், தெட்சணாமூர்த்தி மற்றும் பாலபாஸ்கரன், அன்னஞானம், அமரர்களான சிவமயம், தெட்சணாமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பண்ணாகம், சுழிபுரம்.
077 087 0071
077 164 2243

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 28528) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூர் மயிரிழையில் வெற்றியைத் தவறவிட்டது



**கொல்கத்தா நைட் ரைடஸ் அணியை அதன் சொந்த மண்ணில் தோற்கடிக்கும் வாய்ப்பை ஓர் ஓட்டத்தால் தவறவிட்டது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்.**

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் மோதிய பெங்களூர் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று கொல்கத்தாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

ஆரம்பப் வீரர் பில் சோல்ட் அதிரடியில் வெளுத்து வாங்க ஓட்ட எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது. கடந்த ஆட்டத்தில் சதம் கடந்து அசத்திய சுனில் நறைன் 15 பந்துகளில் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். சோல்ட் 14 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஸ்ரேஸ் ஐயர் 36 பந்துகளில் 50 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். இறுதி நேரத்தில் ரம்டீப் சிங் 9 பந்துகளில் 24 ஓட்டங்களை விளாச அணி 6 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய பெங்களூருக்கு கோலி அதிரடியாக ஆட்டத்தை தொடக்கினாலும் சர்சைக்குரிய முறையில் 7 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். டு பிளெஸிஸ் இந்தத் தொடர் முழுவதும் சொதப்பி வரும் நிலையில் நேற்றும் அது தொடர்ந்தது. வில் ஜக்ஸ் மற்றும் படித்தர் இருவரும் இணைந்து வெற்றியிலக்கை விரட்டினர். அரைச்சதம் கடந்து அசத்தினர். ருசலின் பந்து வீச்சில் சிறப்பான இணைப்பாட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. தனது ஒரே பந்துப் பரிமாற்றத்தில் வில் ஜக்ஸை 32 பந்துகளில் 55 ஓட்டங்களுடனும், படித்தரை 23 பந்துகளில் 52 ஓட்டங்களுடனும் வெளியேற்றி ஆட்டத்தை கொல்கத்தா பக்கம் கொண்டு வந்தார். இறுதிப்பந்து பரிமாற்றத்தில் வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கரன் சர்மா, மிசல் ஸ்ராக்கின் பந்து வீச்சில் 3 சிக்ஸர்கள் விளாசி வெற்றியின் அருகில் அணியைக் கொண்டு சென்றார். 2 பந்துகளில் 3 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவை என்ற நிலையில் கரன் சர்மா ஆட்டமிழந்தார். இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்களுக்கு முயற்சித்த போதும் ஒரு ஓட்டத்தையே பெங்களூரால் பெற முடிந்தது. இறுதியில் ஒரு ஓட்டத்தால் தோல்வியைத் தழுவி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தை அது பெற்றுக்கொண்டது. கொல்கத்தா அணி இந்த வெற்றியின் மூலம் 2ஆம் இடத்துக்கு முன்னேறியது.

(ஒ-5)

# போராடித் தோற்றது பஞ்சாப் கிங்ஸ்




குஜராத் அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி இறுதிவரையில் போராடித் தோற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஆரம்பம் என்னவோ சிறப்பாக அமைந்தாலும் பின்னர் சொல்லிக் கொள்ளும்படியாக அந்த அணி ஆடவில்லை. அந்த அணியின் ஆகப்பிந்திய நம்பிக்கையைக் கொடுக்கும் அதிரடி ஆட்டக்காரர்களான சக்சாக் சிங் மற்றும் சர்மா இருவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர். இறுதியில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை அந்த அணி பெற்றது. பந்து வீச்சில் சாய் கிசோர் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இலகுவான இலக்குக்கு பதிலளித்து ஆடிய குஜராத் அணியும் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. அந்த அணியாலும் இலகுவாக வெற்றியைப் பெற முடியவில்லை. 19.1 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்தே வெற்றியைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹர்சல் பட்டேல் 3 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். ஆட்டநாயகனாக சாய் கிசோர் தெரிவானார்.

(ஒ-5)



## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1939



மறைவு 21 . 04 . 2024

### வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை

கரணவாய் கல்லுவம் மேற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் இலகடி அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (லண்டன்), நிவேதா(லண்டன்), தர்மினி (சுவிஸ்), ரமணன் (இலங்கை), மைதிலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிறோசினி (லண்டன்), காலஞ்சென்ற அகிலன் (லண்டன்) மற்றும் சிவகுமார் (சுவிஸ்), காந்தரூபி (இலங்கை), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கௌதமன், ஜெனோசன், கோபிகன் (லண்டன்), அகிலாஷ், சஞ்சீவ் (சுவிஸ்), சாருஜன், சுபீட்சா, பானுஜன் (லண்டன்), விஷால் (லண்டன்), தீபிகா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (24.04.2024) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இலகடி அல்வாயில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரமணன் - 077 8979 106

தகவல்: குடும்பத்தினர்.

(CR 42259) A-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 09 . 1938



இறப்பு 21 . 04 . 2024

### திருமதி கிறேற்றா மாகிறேற் யோகநாதன்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குருசோ வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறேற்றா மாகிறேற் யோகநாதன் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் யோகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிளேரிபெல் (பபி), ஜெயராஜாவின் (லோறியன்) அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மரியதாஸ், லூசியா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சோபனா, லசந்தன் ஆகியோரின் சிறிய தாயாரும், லக்ஸ்மன், சிறிதயாளன், குமாரியின் அன்பு மாமியும், விபுஷா, தனுஜாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ். White House இல் வைக்கப்பட்டு நாளை (23.04.2024) செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 இற்கு யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு பின்பு புனித கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6293 710

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 10 . 1959



இறப்பு 21 . 04 . 2024

### கந்தையா பாண்டியன்

கரம்பனை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாண்டியன் அவர்கள் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி முத்துப்பிள்ளை கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், மிவர்னா (முன்னாள் குடும்ப நல உத்தியோகத்தர்), பவித்றா (ஆசிரியர் - யா/டிறிபேர்க் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் (கனடா), சதீஷன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமாவும், கரிஷ், கரின், ஆத்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 3611 204

(CR 42260) A-1

தகவல்: குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி....

தையிட்டியில் இராணுவத்தினரால் திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப்பிரதேசம் விடுவிக்கப்பட்டாலும் இராணுவத்தினர் விகாரைப் பகுதிக்குள் நுழைவதற்குத் தமிழ் மக்களுக்குத் தடைவிதித்துள்ளனர்.

விகாரை அமைந்துள்ள காணி, தனியார் காணி என்றும் அதை விடுவிக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதேவேளை- இராணுவத்தினர் விகாரைக்குரிய 20 ஏக்கர் காணியிலேயே அதை அமைத்துள்ளதாகத் தவறான தகவல்களை வழங்கியிருந்தனர். இந்த நிலையில் தற்போது விகாரை அமைந்துள்ள இடத்தைத் தவிர எஞ்சிய தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக பொதுமக்களை காணிகளை அடையாளம் காண்பித்து நிலஅளவை செய்யும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விகாரை அமைந்துள்ள அனைத்துக் காணிகளும் இராணுவத்துக்குரியவை எனவும் அவற்றை அளவீடு செய்யத் தேவையில்லை என்றும் இராணுவத்தினர் அதிகாரிகளுக்கு கடும் தொனியில் தெரிவித்துள்ளனர். பொதுமக்களை உள்நுழைவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது எனவும் திட்டவட்டமாக மறுத்துள்ளனர்.

மக்கள் தங்கள் காணிகளை அடையாளப்படுத்தாமல் நிலஅளவை செய்ய முடியாது எனத் தெரிவித்து நில அளவைத் திணைக்களத்தினரும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினரும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதேவேளை- மேற்படி விகாரை அமைந்துள்ள காணியை விகாரைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு, ரியர் அட்மிரல் சரத்வீரசேகரவை தலைமையாகக் கொண்ட தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் செயலர் சூலா ஹேரத் கடிதம் அனுப்பியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஔ,5)

## பொறுப்புக்கூறலை...

நேற்று இடம்பெற்ற நினைவுகூரல் நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ரே பிரான்சே உயிர்த்த ஞாயிறு படுகொலைகளுக்கு யார் காரணம் என்பதை கண்டுபிடிப்பதற்கு முழுமையான வெளிப்படையான விசாரணைகள் அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றது. அது பொறுப்புக்கூறலுக்கான பொறுப்புக்கூறலாகயிருக்கலாம் அல்லது சமீபத்தைய மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலாகயிருக்கலாம் என ஐ.நா.வின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

நாடு முன்னோக்கி நகரவேண்டுமென்றால் அதற்குத் தீர்வை காணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயர்நீதிமன்றம், தாக்குதலை தடுக்கத் தவறினார்கள் என முன்னாள் ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகளிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள போதிலும் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக இன்னமும் காத்திருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள மார்க் அன்ரே பிரான்சே, சவால்களுக்குத் தீர்வை காண்பதற்கான முயற்சிகளின் ஒருபகுதியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுதல் வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (அ-ஔ,இ)

## ஈஸ்டர்....

பிரதான நினைவேந்தல் தாக்குதல் நடைபெற்ற கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் அனைத்து மதத் தலைவர்கள் மற்றும் தூதர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திலும் உயிர்த்த ஞாயிறுத் குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் இடம்பெற்றது. உயிர்நீத்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், தேவாலய பிரதான மணி ஒலிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மறைமாவட்ட பங்குகுரு முதல்வர் ஜெயரட்ணம் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அதனைத் தொடர்ந்து, உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் முகமாக மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டன.

இதேவேளை- மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலோடு தொடர்புடைய சூத்திரதாரிகளை கைது செய்யுமாறுகோரி பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்காவின் முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ஔ,இ)

## ஈரான்....

தினம் புதன்கிழமை காலை விசேட விமானம் மூலம் மத்தள விமான நிலையத்தை வந்தடையவுள்ளார். அங்கிருந்து நேரடியாக புறப்பட்டு உமாஓயா திட்டத்தை திறந்து வைக்கவுள்ளார்.

அதன் பின்னர் கொழும்பு சென்று இலங்கை தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். ரைசியுடன் அவரது மனைவி, மகள் ஆகியோரும் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ரைசியின் வருகையை திட்டமிடுவதற்காக ஏற்கனவே ஈரானிய தூதுக்குழு ஒன்று இலங்கை வந்தடைந்துள்ளது என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. (அ-ஔ,6)

## திடலை....

போது ரேஸ் கார் பாதையை விட்டு விலகி பார்வையாளர்கள் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அதிகளவானோர் பார்வையிட்டுக்கொண்டிருந்த நிலையில் சம்பவ இடத்திலேயே 5 பேர் உயிரிழந்துள்ளனர். எஞ்சிய இருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும்போது உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## தெல்.பிரதேச...

லிப்பழை பிரதேச செயலர் தாமதிப்பதாகத் தெரிவித்து, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் விகாராதிபதி முறைப்பாடுசெய்துள்ளார். அவர் முறைப்பாடுசெய்ததற்கு அமைவாக இந்த வாரம் பிரதேச செயலரை கொழும்புக்கு விசாரணைக்கு வருமாறு ஆணைக்குழு அழைத்துள்ளது. (அ-ஔ,5)

## முள்ளிவாய்க்கால்...

யாழ்ப்பாணம் புனித தெரேசா தேவாலய முன்றிலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சிவில் சமூக அமைப்புகளின் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- இந்தக் கலந்துரையாடலில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15ஆவது ஆண்டு நினைவேந்தலைப் பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்தி மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நினைவேந்தல் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் கலந்துகொண்ட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

மக்கள் தமக்கு எவ்வாறான வாழ்க்கை தேவை, அதற்கு எவ்வாறான சமூக பொருளாதார அரசியல் ஏற்பாடுகள் தேவை என்பதைத் தாமே சிந்தித்து அதற்காக குரல் கொடுத்து செயற்படும் காலம் வந்து விட்டது.

மக்களுக்கு விரோதமாகச் செயற்படும் அரசுகள், பெருவணிக நிறுவனங்கள், கட்சிகள், அமைப்புகளின் பரப்புரைகளி லிருந்தும், மூளைச் சலவை செய்யப்படுவதிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணர்கிறார்கள்.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் பேரவலம் 15ஆவது ஆண்டாக நினைவுகூரப்படவிருக்கின்றது. இந்த நினைவேந்தல் மிகவும் முக்கியமானது. இந்த நினைவேந்தலை நாங்கள் பரவலாக்கம் செய்யவேண்டும். இந்த நினைவேந்தல் மூலம் மீள நிகழாமை உறுதி செய்யப்பட வேண்டும்.

காஸாவில் தற்போது இன்னுமொரு மனிதப் பேரவலம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அவலம் மீண்டும் நடைபெறாமலிருப்பதை மனதிலே கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நாங்கள் முக்கியத்துவப்படுத்த வேண்டும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வை ஒரு இடத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தி வைக்காமல் பரந்த அளவில், எல்லோரும் இயல்பாக நினைவேந்தலை கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலப் பகுதியில் கடந்த காலங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பகிரும் வழக்கம் இருந்து வருகிறது. இதனைக் கிராம மட்டங்களுக்குப் பரவலாக்கி வீடுகள் தோறும் பிடியரிசி சேகரித்து கிராமமாக ஒன்றுகூடி முள்ளிவாய்க்கால் க[illegible]ரிமாறும் செயற்பாட்டை முன்[illegible]தன் மூலம் மக்களுக்கு இது 6[illegible]டர்பான அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு நீடித்த நினைவேந்தலாக, ஒரு இன அழிப்பின் நினைவேந்தலாக எவ்வாறு மேற்கொள்ளலாம்? என்பதைக் கிராம மட்டப் பொது அமைப்புக்கள் தீர்மானித்து முன்னெடுக்க வேண்டும். அத்துடன் இளையோர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தொடர்ச்சியாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டுமெனவும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். (ஒ-66)

## முதியவரின்...

பகுதியை முல்லைத்தீவு நீதிவான் சென்று பார்வையிட்டதுடன் உரிய விசாரணைகள் மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை இடுமாறும் கட்டளையிட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது

இதேவேளை- முதியவரின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ஔ,35)

## சகோதரர்கள்...

சகோதரர்களில் அண்ணனான வலோரியான் மோசஸ் பத்திநாதன் (வயது-63) என்பவர் பலாலி வடக்கில் வசித்து வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை காலை உடல் நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார்.

அவரின் தம்பியான வலோரியான் எஸ்பிறின் தோணிஸ் (வயது-55) என்பவர் புதுமாத்தளன் பகுதியில் வசித்து வந்த நிலையில் கடல் தொழிலுக்குச் சென்ற நிலையில் கடந்த வியாழக்கிழமை காலை படகில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சகோதரர்கள் இருவரும் இருவேறு இடங்களில் வசித்து வந்த நிலையில் ஒரே நாளில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-ஔ-100)

## தேங்காய்...

விலைச் சேர்ந்த தங்கவேல் ரவீந்திரராசா (வயது-55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி அயல் வீட்டில் தேங்காய் பிடுங்குவதற்கு ஏறியுள்ளார். தென்னை மரத்தில் காய்ந்த மட்டையைப் பிடித்தபோது தவறி விழுந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஔ,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்கள் என்ன செய்தார்கள்?

## பிள்ளை...யான் கேள்வி

கொழும்பு, ஏப். 22

கட்சிக்குள் ஓர் அமைப்பைஒன்றுபடுதத முடியாத தமிழ்த் தலைவர்கள் இந்த மண்ணுக் கும் இந்த நாட்டுக்கும் என்ன பெற்றுக்கொடுத்தனர்? தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது திட்டமிடல் இல்லாத ஒரு கற்பனை.

-இவ்வாறு வீதி அபிவிருத்தி இரா ஜாங்க அமைச்சர் சிவனேச துரை சந்திரகாந் தன் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையிலுள்ள சிறு பான்மை மக்களை மையப்படுத்தியதாக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற தகவல்கள் ஊடகங்க ளில் வெளிவருகின்றன.

அது வெற்றிபெற முடியாத, திட்டமிடல் இல்லாத ஒரு கற்பனை.

இந்தப் பொதுவேட்பாளர் தொடர்பில் நாங்கள் ஆழமாக ஆராயவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## போலி இணையத்தளம் 5 நீக்கம்

கொழும்பு, ஏப். 22

தபால் திணைக்களத்தின் இணையத்தளத்தைப்போன்று வடி வமைக்கப்பட்ட 5 போலி இணையத் தளங்கள் நீக்கப்பட்டுள்ளன என்று இலங்கை கணினி அவசர பதில் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இணையத்தளங்களில் சுமார் 35 பணமோசடி சம்பவங்கள் பதிவா கியுள்ளன என்றும் அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலா ளர் தெரிவித்தார். (ச-இ)


### வேலையாள் தேவை

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை

தொடர்புகளுக்கு: 076 264 4237

### மலிவு விற்பனை

இன்று முதல் 5 நாட்களுக்கு மட்டும் பூங்கன்றுகள், பூச்சாடிகள் 20% விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

தொடர்புகளுக்கு: 075 944 4601

### தவறவிடப்பட்டுள்ளது

கண்டி வீதி அரியாலை தபாற்கட்டை சந்திக்கு அருகாமையில் வெள்ளை நிற கடித உறையில் திருமண சான்றிதழ் (UK) தவறவிடப்பட்டுள்ளது. கடித உறையில் தவறவிடப்பட்டவர்களின் தொலைபேசி இலக்கம், பெயர் என்பன உள்ளன கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.


தகுந்த சன்மானம் வழங்கப்படும்

077 021 7845

whats app: 0044 798 848 9454


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 03 . 1967 — மறைவு 18 . 04 . 2024



### பொன்னம்பலம் இராசதுரை

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் Zurcherstrasse 50a, 7320 Sargans இனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசதுரை அவர்கள் (18.04.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் சோதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் பாமினி அவர்களின் அன்புக் கணவரும் ரஞ்சித், அஜித் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோகிலாம்பாள் (கோகிலா) இராகவன், அருந்ததி (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருபாகரன், மாலினி, பரமேஸ்வரன், சடாச்சரன், றஞ்சினி (வசந்தி), பஞ்சாட்சரன், நாதன் ஆகியோரின் மைத்துனரும் பாலேந்திரன் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை Markthalle, St.Gallerstrasse 145, 7320 Sargans எனும் இடத்தில் நடைபெற இருப்பதனை கனத்த இதயத்துடன் அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்.

வி.சோதிப்பிள்ளை : 077 842 7149
ப. அருந்ததி : 076 799 7239

(CS 311) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1934 — மறைவு 20 . 04 . 2024



### பண்டிதர் கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை
(ஓய்வுநிலை - ஆசிரியர்)

விழிசிட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் பழைய தபாற்கந்தோர் வீதி, இருபாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை உமாமகேஸ்வரம்பிள்ளை நேற்று முன்தினம் (20.04.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - சுந்தரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும், சாவித்திரிதேவியின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற பவளநாயகி மற்றும் சாரதாம்பிகை, ஜெகதீஸ்வரம்பிள்ளை (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுமூகன் (லண்டன்), சேக்கிழான் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிரஞ்சனா, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியன், பிரணித்தா, லக்சிதா, யஸ்வி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செக்கடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 4944

(CS 54794) N

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 11 . 1943 — மறைவு 21 . 04 . 2024



### சோமசுந்தரம் ஜெகதீஸ்வரி (ஏலாகரம்பை)

வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், சாத்தாவத்தை வைரவர் கோவிலடி, மூத்ததம்பி வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஜெகதீஸ்வரி அவர்கள் நேற்று (21.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி சுகிர்தவதியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், குழந்தைவேலு சோமசுந்தரம் (சமாதான நீதவான், ஓய்வுநிலை கணக்குப்பதிவாளர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), வடிவேஸ்வரன் (ஓய்வு நிலை உதவி பாதுகாப்பு உத்தியோகத்தர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) காலஞ்சென்ற இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருஸ்ணதாஸ் (ஆசிரியர்.கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ரூபதாஸ் (கனடா-முன்னாள் பொதுசுகாதார பரிசோதகர்), விமலதாஸ்(மென்பொருள் பொறியியலாளர் Warranty Soft-U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேகா (ஆசிரியை , கொழும்பு இந்துக்கல்லூரி), துளசிகா (கனடா), துளசிகா (ஆசிரியை, வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சதுர்சன், மிருதுளா, காயத்திரி (கனடா), நிகழ்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2024) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மூத்ததம்பி வீதி,
சாத்தாவத்தை வைரவர் கோவிலடி,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 990 5483, 077 404 1904
whats app: +1514 892 2829

(CS 307) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 — செய்தி: news@uthayan.com — விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.